(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 388.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2014 ஓகத்து 22, வெள்ளிக்கிழமை, பி.ப. 1.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2689/'12

1.

கௌரவ சஜித் பிரேமதாச,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் பணியாற்றுகின்ற கல்விசார் பணியாட்டொகுதியினரின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இப்பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) 2012 ஆம் ஆண்டிற்காக இப்பல்கலைக்கழகத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்த நிதி ஏற்பாடுகளின் பெறுமதி எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் நிலவும் பற்றாக்குறைகள் மற்றும் குறைபாடுகளை நிவர்த்திசெய்வதற்கு மேலே குறிப்பிட்டுள்ளவாறு ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடுகள் போதுமானதா என்பதையும்;

(ii) மேற்படி பல்கலைக்கழகத்தின் அபிவிருத்திக்காக தயாரிக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டமொன்று உள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், இத்திட்டத்திற்குரிய வேலைத்திட்டம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3307/ '12

2.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இன்றுள்ளவாறு கொழும்பு மாவட்டத்தில் சேவையாற்றும் சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்களின் எண்ணிக்கையையும்;

(ii) அவர்களின் பெயர்கள் மற்றும் விலாசங்களையும்;

(iii) இவ்வலுவலர்களால் ஆற்றப்படும் சேவைகளையும்;

(iv) ஒரு சமுர்த்தி அபிவிருத்தி அலுவலரின் மாதாந்த சம்பளம் மற்றும் மேலே சொல்லப்பட்ட மாவட்டத்தில் உள்ள அனைத்து சமுர்த்தி அலுவலர்களின் சம்பளக் கொடுப்பனவுக்காக செலவிடப்படும் மாதாந்த பணத் தொகையை வெவ்வேறாகவும்

அவர் கூறுவாரா?

(ஆ) கொழும்பு மாவட்ட சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்களால் ஆற்றப்படும் சேவை போதுமானதாகவுள்ளதா என்பதையும் அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3959/ '13

3\.

கௌரவ புத்திக பதிரண,— உள்ளூராட்சி, மாகாணசபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கண்டி மாநகர சபையினால் கொஹாகொட பிரதேசத்தில் அகற்றப்படும் குப்பை கூளங்கள் மற்றும் கழிவுப் பொருட்களை முகாமைத்துவம் செய்தல் ஒப்படைக்கப்பட்டுள்ள நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி யாதென்பதையும்;

(ii) மேற்படி நிறுவனத்தின் உரிமையாளர் மற்றும் பணிப்பாளர் சபை அங்கத்தவர் களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் தனித் தனியாக யாவையென்பதையும்;

(iii) மேற்படி நிறுவனத்தின் உரிமையாளர் பிறிதொரு நிறுவனத்தில் பதவியொன்றை வகிக்கின்றாரா என்பதையும்;

(iv) மேற்படி (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனம் கம்பனிகள் பதிவுச் சட்டத்தின் கீழ் அல்லது வேறொரு நிறுவனத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், அந் நிறுவனங்களின் பெயர்கள் அல்லது நிறுவனத்தின் பெயர் மற்றும் பதிவு இலக்கம் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி நிறுவனத்திற்கும் கண்டி மாநகர சபைக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்டுள்ள குத்தகை உடன்படிக்கையின் பிரதியொன்றை சபையில் சமர்ப்பிப்பாரா;

(ii) மேற்படி குத்தகை உடன்படிக்கையில் உள்ளடங்கியுள்ள நிபந்தனைகள் யாவையென்பதையும்;

(iii) உடன்படிக்கையின் பிரகாரம் நிறைவேற்றப்பட்டுள்ள மற்றும் தவறவிடப்பட்டுள்ள நிபந்தனைகள் யாவை என்பதையும்;

(iv) நிபந்தனைகள் மீறப்பட்டிருப்பின், அதற்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4174/ '13

4\.

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2013 யூலை மாத இறுதியளவில் அரச பல்கலைக்கழகங்களில் சேவையில் ஈடுபட்டிருந்த ஒவ்வொரு கல்விசாரா பதவியணியையும் சேர்ந்த ஊழியர் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு;

(ii) பல்கலைக்கழக கல்விசாரா பதவியணி ஊழியர்களின் ஆட்சேர்ப்புடன் தொடர்புடைய ஆகக்குறைந்த சம்பள அளவு யாது;

(iii) மேற்படி கல்விசாரா ஊழியர்களின் சம்பள ஏற்றங்கள் அமைந்துள்ள விதம் யாது;

(iv) கல்விசாரா ஊழியர்களின் பல்வேறு சம்பளப் படிநிலைகளுடன் தொடர்புடைய கொடுப்பனவுகள் யாவை;

(v) தற்போது கல்விசாரா பதவியணிகளில் நிலவுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கை யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4466/ '13

5\.

கௌரவ அனுர திஸாநாயக்க,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) 2010, 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் ஐக்கிய அமெரிக்காவின் இலங்கை தூதரகம் Hedges Strategies எனும் கம்பனியுடன் கொடுக்கல் வாங்கல் மேற்கொண்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி கொடுக்கல் வாங்கல் இடம்பெற்றுள்ள காலப்பகுதி யாதென்பதையும்;

(iii) மேற்படி கொடுக்கல் வாங்கல் மூலமாக நிறைவேற்றப்பட்டுள்ள பணி அல்லது பணிகள் யாவையென்பதையும்;

(iv) அதன் மூலம் கிடைத்துள்ள நன்மைகள் யாவையென்பதையும்;

(v) மேற்படி பணிகளுக்காக மேற்கொள்ளப்பட்டுள்ள கொடுப்பனவுகளின் பெறுமதி யாதென்பதையும்;

(vi) அதற்காக நிதி ஒதுக்கப்பட்ட செலவுத் தலைப்பு யாதென்பதையும்;

(vii) மேற்படி கம்பனிகளுடன் உடன்படிக்கைகள் கைசாத்திடப்பட்டிருப்பின், அந்த உடன்படிக்கைகளை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4623/ '13

6\.

கௌரவ சுஜீவ சேனசிங்க,— பிரதம அமைச்சரும் புத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) ரஷ்ய தூதரகத்திற்கு பெற்றுக்கொடுப்பதற்காக நகர அபிவிருத்தி அதிகார சபை தனியார் காணியொன்றை சுவீகரித்துள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி சுவீகரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ள அடிப்படை யாதென்பதையும்;

(iii) ரஷ்ய தூதரகத்திற்கு பெற்றுக்கொடுக்கப்படவுள்ள காணியின் மொத்த பரப்பளவு எவ்வளவென்பதையும்;

(iv) தனியார் காணியொன்றை சுவீகரித்து வேறொரு நிறுவனத்திற்கு விற்பனை செய்தலானது நாகரீகமானதொரு செயலாகுமா என்பதையும்;

(v) சுவீகரிக்கப்பட்ட காணிகளை, நடைமுறையிலுள்ள சட்டத்தின் கீழ் பொதுப் பணியொன்றுக்காகவன்றி வேறொரு பணிக்காகப் பயன்படுத்துவதற்கான இயலுமை காணப்படுகின்றதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி காணி சுவீகரிக்கப்பட்டதன் பின்னர் இக்காணிகளில் வசித்தவர்களுக்கு பெற்றுக்கொடுக்கப்பட்ட இழப்பீட்டுத் தொகை எவ்வளவென்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

4634/ '13

7\.

கௌரவ பி. ஹரிசன்,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) இலங்கை எதிர்காலத்தில் வெளிநாடுகளுக்கு அரிசி ஏற்றுமதி செய்வதற்கு எதிர்பார்க்கின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், வெளிநாட்டு சந்தைக்கு தேவையான அரிசியை உற்பத்தி செய்வதற்கு தேவைப்படும் விதை நெல் தற்போது இந்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்றதா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி விதை நெல் உற்பத்தி செய்யப்படுகின்ற பண்ணைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்டுள்ள பாஸ்மதி வகைகள் உள்நாட்டு சந்தைக்கு விநியோகிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) பாஸ்மதி வகைகளை பயிரிடும் விவசாயிகளின் உற்பத்திகளுக்கு அதிக விலையை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், பாஸ்மதிக்காக செலுத்தப்படுகின்ற விலை யாதென்பதையும்;

(iv) அவ்வாறு உற்பத்தி செய்யப்படும் பாஸ்மதி வகைகளை கொள்வனவு செய்வதற்காக அரசாங்க நிலையமொன்று தாபிக்கப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4761/ '14

8.

கௌரவ அசோக் அபேசிங்ஹ,—கால்நடை வளர்ப்பு, கிராமிய சன சமூக அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கோழிப் பண்ணைகள் அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின் 2012 ஆம் ஆண்டில் இதற்கென ஒதுக்கப்பட்ட பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) குருநாகல் மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள கோழிப் பண்ணைகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) சுய தொழிலாக சிறிய அளவிலான கோழிப்பண்ணைகளை அபிவிருத்தி செய்வதற்கானதொரு வேலைத்திட்டம் செயற்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4817/ '14

9.

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— வலு, சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குருநாகல் மாவட்டத்தில் நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற தெதுறுஓயா நீர்த்தேக்க கருத்திட்டத்துடன் தொடர்புடையதாக சிறிய நீர் மின் உற்பத்தி நிலையமொன்றை நிர்மாணிக்க உத்தேசமாயுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதனூடாக உற்பத்தி செய்ய எதிர்பார்க்கின்ற மின்சாரத்தின் கொள்ளளவு எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டத்திற்கு செலவாகும் மொத்த பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) தற்போது மேற்படி மின்உற்பத்திக் கருத்திட்டத்தின் நிர்மாணிப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(v) ஆமெனில், நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளும் நிறுவனம் யாது என்பதையும்;

(vi) இவ்வாறு உற்பத்தி செய்ய எதிர்பார்க்கின்ற மின்சாரத்தை இலங்கை மின்சார சபை கொள்வனவு செய்வதற்கு உடன்படிக்கை செய்து கொண்டுள்ளதா என்பதையும்;

(vii) ஆமெனில், ஒரு அலகு மின்சாரத்தை கொள்வனவு செய்ய எதிர்பார்க்கின்ற பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4907/ '14

10.

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— புனர்வாழ்வளிப்பு, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மஹர சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள மொத்த தடுப்புக்கைதிகளின் எண்ணிக்கையையும்;

(ii) இவர்களில் சந்தேகநபர்களாக அங்கு தடுத்துவைக்கப்பட்டுள்ளோர் எண்ணிக்கையையும்;

(iii) சிறைக்கைதிகளாக தடுத்துவைக்கப்பட்டுள்ளோர் எண்ணிக்கையையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மஹர சிறைச்சாலையில் "எல்" மற்றும் "என்" ஆகிய தடுப்புக் கூடங்கள் இரண்டும் சந்தேகநபர்களைத் தடுத்துவைக்க பயன்படுத்தப்படுகின்றன என்பதையும்;

(ii) மேற்படி கூடங்களில் அதிக நெருக்கடி நிலவுகின்றதென்பதையும்;

(iii) அங்கு மலசலகூட வசதிகளும், அருந்துவதற்கும் நீராடுவதற்கும் அவசியமான நீர் வசதிகளும் ஆகக்குறைந்த மட்டத்தில் நிலவுகின்றதென்பதையும்;

(iv) மேற்படி நிலைமைகள் காரணமாக அந்தக் கூடங்களில் தடுப்புக்கைதிகள் மிகவும் துன்பகரமான நிலைக்கு ஆளாகியுள்ளனரென்பதையும்

அவர் அறிவாரா?

(இ) மஹர சிறைச்சாலையில் தடுத்துவைக்கும் இடங்களில் நிலவுகின்ற நெரிசலைக் குறைப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) (i) மஹர சிறைச்சாலையின் தற்போதய அத்தியட்சகரின் பெயர் யாது;

(ii) மேற்படி சிறைச்சாலையில் பணியாற்றுகின்ற மொத்தப் பதவியணி எவ்வளவு;

(iii) மஹர சிறைச்சாலையின் அத்தியட்சகர் உள்ளிட்ட பதவியணியினர் அங்குள்ள தடுப்புக்கைதிகளை மனிதாபிமானமற்ற வகையில் நடத்துவதாக முன்வைக்கப்படுகின்ற குற்றச்சாட்டுகளில் ஏதேனும் உண்மை உள்ளதா;

(iv) ஆமெனில், அது சம்பந்தமாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

5028/ '14

11.

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மருத்துவ சிகிச்சை வழங்கப்படுகின்ற போது சத்துணவு வல்லுநர் ஒருவரால் ஆற்றப்படுகின்ற பணிகள் யாவை என்பதையும்;

(ii) சுகாதார சேவையினுள் இருக்க வேண்டிய சத்துணவு வல்லுநர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) தற்போது அரசாங்க மருத்துவமனைகளில் சேவையாற்றுகின்ற சத்துணவு வல்லுநர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iv) அரசாங்க மருத்துவமனைகளுக்குத் தேவையான அளவு சத்துணவு வல்லுநர்களை இதுவரை ஆட்சேர்க்காதுள்ளமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(v) நோயாளர்களுக்கு மிகச் சிறந்ததொரு மருத்துவ சேவையை வழங்கும் பொருட்டு தேவையான அளவு சத்துணவு வல்லுநர்களை துரிதமாக ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2690/ '12

12.

கௌரவ சஜித் பிரேமதாச,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மொரட்டுவை பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு யாதென்பதையும்;

(ii) இப்பல்கலைக்கழகத்தின் ஸ்தாபகர்கள் யாவரென்பதையும்;

(iii) தற்போது இப்பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2012 ஆம் ஆண்டிற்காக மொரட்டுவை பல்கலைக்கழகத்திற்கு ஒதுக்கப்பட்ட பணத்தொகை யாதென்பதையும்;

(ii) மேற்படி பல்கலைக்கழகத்திற்கு 2011 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட பணத்தொகைக்கு ஒப்பீட்டளவில் இப் பணத்தொகை அதிகரித்துள்ள அல்லது குறைவடைந்துள்ள அளவு எவ்வளவு என்பதையும்;

(iii) மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் மாணவர்களுக்கு தரம்வாய்ந்த வகையில் கல்வி புகட்டுவதற்கு போதியளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3308/ '12

13.

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசியல்வாதிகள் அல்லது அரசாங்க அலுவலர்கள் வெளிநாடுகளுக்குச் செல்லும் போது அவர்களுக்கான செலவினங்களை இலங்கைத் தூதரகங்கள் தூதரக நிதியிலிருந்து மேற்கொள்ள வேண்டியுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறெனின், அத்தகைய செலவுகளுக்காக சம்பந்தப்பட்ட தூதரகங்களினால் கடந்த ஆறு வருடங்களுக்கு செலவு செய்யப்பட்ட மொத்தத் தொகையை வருடாந்த அடிப்படையிலும்;

(iii) மேற்கூறிய கொடுப்பனவுகளை மேற்கொண்டதற்கான நோக்கத்தையும்;;

(iv) அத்தகைய கொடுப்பனவுகளுக்கான காரணங்கள் தனிப்பட்டவையா அல்லது உத்தியோகபூர்வமானவையா என்பதையும்;

(v) அவை தனிப்பட்ட காரணங்களுக்காகவெனின், கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்ட நபர்களையும்;

(vi) அத்தகைய கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்ட திகதியையும் கொடுப்பனவுகளுக்கான காரணத்தையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3960/ '13

14.

கௌரவ புத்திக பதிரண,— தெங்கு அபிவிருத்தி, மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) லுனுவில தெங்கு ஆராய்ச்சி நிறுவகத்தின் கீழுள்ள தோட்டங்களிலிருந்த சுமார் 300 கறவை மாடுகள் போலியான கேள்விப்பத்திரம் கோரப்பட்டு இறைச்சிக்காக விற்பனை செய்யப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) மேற்படி மாடுகளில் கறவைப் பசுக்களும், கன்றுக் குட்டிகளும், சினைப் பசுக்களும் இருந்தனவென்பதையும்;

(iii) அரச சட்ட விதிகளுக்கமைய இறைச்சிக்காக காளை மாடுகளை மாத்திரமே விற்பனை செய்ய முடியும் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிடப்பட்டவாறு விற்பனை செய்யப்பட்டுள்ள ஒவ்வொரு மாட்டினதும் வயது மற்றும் நிறை தனித்தனியாக யாதென்பதையும்;

(ii) மேற்படி மாடுகளை கொள்வனவு செய்துள்ள நபர்களின் பெயர் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேலே குறிப்பிடப்பட்ட மாடுகள் நடைமுறையிலுள்ள சட்ட விதிகளுக்கு முரணாக விற்பனை செய்யப்பட்டுள்ளதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி மோசடிமிக்க கொடுக்கல் வாங்கல்களைப் பற்றி முறைசார்ந்த விசாரணையொன்றை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4178/ '13

15.

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2011 ஆம் ஆண்டில் ஏற்பட்ட z-score பிரச்சினை காரணமாக கல்வியியல் கல்லூரிகளுக்கு மாணவர்கள் விண்ணப்பிக்கும் போது சிக்கலான நிலை தோன்றியமையை அறிவாரா என்பதையும்;

(ii) கல்வியியல் கல்லூரிகளுக்கான மாணவர் சேர்ப்பு தொடர்பாக வர்த்தமான அறிவித்தல்கள் வெளியிடப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) மேற்படி வர்த்தமான அறிவித்தல்களின் இலக்கங்கள் மற்றும் திகதிகள் யாவையென்பதையும்;

(iv) மேற்படி வர்த்தமான அறிவித்தல்களில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் யாவையென்பதையும்;

(v) தற்போது கல்வியியல் கல்லூரிகளுக்காக கிடைக்கப்பெற்றுள்ள விண்ணப்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(vi) அவற்றில் நேர்முகப் பரீட்ச்சைக்காக அழைக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

## அனுதாபப் பிரேரணை

1.

காலஞ்சென்ற முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ (பேராசிரியர்) ஏ.வீ. சுரவீர

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

ஆட்சியுரிமை (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2014, ஓகத்து 07) [1].

* 2.

சுரங்கங்கள், கனிப்பொருட்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 3.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.1),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் குவைட் நாட்டரசின் அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங் களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 நவெம்பர் மாதம் 05 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாகவுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 4.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.2),— முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் மற்றும் வியட்நாம் சோசலிச குடியரசு அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையேயான ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 5.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல. 3),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் செக் குடியரசு அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2011 மார்ச் 28 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும், 2014.08.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது தேசிய பொருளாதார அபிவிருத்திக்கு அத்தியவசியமாகவுள்ளதென இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 6.

போக்குவரத்து அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவுடனும் 19 ஆம் உட்பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும் அச் சட்டத்தின் 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2013 யூலை மாதம் 31 ஆந் திகதிய 1821/31 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.11.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 7.

தொழில், தொழில் உறவுகள் அமைச்சர்,— ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— காலத்துக்குகாலம் திருத்தப்பட்டவாறான 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் 46 ஆம் பிரிவின் கீழ் தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2013 மே மாதம் 13 ஆந் திகதிய 1810/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.06.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 8.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் மற்றும் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 9.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— (469 ஆம் அத்தியாயமான) தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 திசெம்பர் மாதம் 06 ஆந் திகதிய 1735/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.12.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

* 10.

சுகாதார அமைச்சர்,— விஜயகுமாரதுங்க ஞாபகர்த்த வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் 2011,— 1999 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தின் கீழ் 2013.09.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும், 2011.12.31ஆம் திகதியில் முடிவடையும் வருடத்தின் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்குட்படுத்தப்பட்டதுமான விஜயகுமாரதுங்க ஞாபகர்த்த வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2013.09.13 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 11.

சுகாதார அமைச்சர்,— ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் 2011,— 1983 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின், 2013.11.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும் 2011.12.31ஆம் திகதியில் முடிவடையும் வருடத்தின் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்குட்படுத்தப் பட்டதுமான ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.07 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 12.

தொழிநுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்தின் வருடாந்த அறிக்கை 2011,— 1957ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க அரசாங்க கைத்தொழிற்துறைக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2) ஆம் பிரிவிற்கமைய, 2013.10.10 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதான, 2011 சனவரி 01 ஆம் திகதி முதல் 2011 திசம்பர் 31 ஆம் திகதி வரை முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகளுடனான தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிநுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

13.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

14.

தற்காப்புக் கலைகளுக்கான நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

15\.

த இன்ஸ்ரிரியூட் ஒவ் சேர்டிபைட் பப்ளிக் எக்கவுன்டன்ஸ் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

16\.

அல் ஜாமியாத்துல் கவ்ஸிய்யா (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

17\.

ஜயந்திபுர நலன்புரிச் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

18\.

மெத் சேவா மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

19\.

ஸ்ரீ லங்கா கமநல நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

20\.

ஜயரத்ன மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

21\.

ஜம்மிய்யத்துல் ஸஹ்வா அல் - கைரிய்யா (ஜஸ்கா) (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

22\.

எம்.கே.ஏ.டீ.எஸ். குணவர்தன மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.

---

[1] ''சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக'' எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.